தினமும் கூச்சல் போடுகிறார்களே என்று பார்க்காமல், பெருந்தன்மையோடு அவர்களை நாளைக்கு வரவழைத்திருக்கிறார்கள். அதற்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—00

5. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவர்களின் விடைத்தாள்கள் காணாமல் போனது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 'திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவர்களின் விடைத்தாள்கள் காணாமல் போனதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து' இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. விடியல் எஸ். சேகர், திரு. அருள் அன்பரசு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தி. வேல்முருகன், டாக்டர் க. நெடுஞ்செழியன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திருமதி பி. பத்மாவதி, திரு. சு. குணசேகரன், திரு. தி. இராமசாமி, திரு. எஸ். இராசசேகரன், திரு. கே. உலகநாதன், ம.தி.மு.க. சார்பாக டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், திரு. ரா. வரதராஜன் ஆகியோர் விதிகள் 56 மற்றும் 55—ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் யார் பேசுகிறீர்கள்? திரு. சி. ஞானசேகரன் அவர்களா? சுருக்கமாக உரையாற்றுங்கள், நேரமில்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் 8 ஆம் தேதி, முசிறி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலே இயற்பியல், பொருளாதாரம் போன்ற பாடங்களுக்கு பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவர்களுடைய விடைத்தாள்கள், 267 பேர்களுடைய விடைத்தாள்கள் எல்லாம் Post Office மூலமாக அனுப்பப்பட்டவை, இடையிலே மாயமாகிவிட்டது என்கிற ஒரு செய்தி அந்தத் தேர்வு எழுதிய

அப்பகுதி மாணவர்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சியைத் தந்திருக்கிறது. மற்ற மாணவர்களுடைய விடைத்தாள்கள் எல்லாம் திருத்தப்பட்டு, உடனடியாக result வரக்கூடிய ஒரு காலகட்டம். அப்படி வருகிறபோது, இந்த மாணவர்களுடைய விடைத்தாள்கள் மட்டும் இன்னும் காணாமல், போலீஸ் வழக்கு ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு, எப்போது போலீசாரால் அது கண்டுபிடிக்கப்பட்டு, பிறகு அவர்களுடைய விடைத்தாள்கள் எல்லாம் திருத்தப்பட்டு அவர்களுக்கு எப்போது result வரும்; அவர்கள் எப்பொழுது மேல் படிப்பிற்குப் போக முடியும் என்கிற ஒரு பெரிய வினா இங்கே தொக்கி நிற்கிறது. இப்படிப்பட்ட சூழலில், 1988 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன், அப்பொழுதே இப்படி தொலைந்துபோன, காணாமல் போன மாணவர்களுடைய விடைத்தாள்களுக்குப் பதிலாக உடனடியாக எந்தெந்தப் பகுதியிலே, அந்தத் தேர்வினை எழுதிய மாணவர்களுடைய விடைத்தாள்கள் காணாமல் போய்விட்டனவோ அவர்களுக்கு மீண்டும் தேர்வை வைத்து, உடனடியாக அவை திருத்தப்பட்டு, பிளஸ் 2 மாணவர்களுடைய result எப்பொழுது வெளியானதோ அப்பொழுதே வெளியான ஒரு வரலாறு இருக்கிறது என்று கூறுகிறார்கள். அந்த வகையிலே மீண்டும் அந்த மாணவர்களுக்குத் தேர்வை வைத்து, உடனடியாக மற்ற பிளஸ் 2 மாணவர்களுக்கு result வருகிறபோதே, அந்த result–ன்போதே அவர்களுக்கும் result வெளியிட்டு அவர்கள் மேல் படிப்பைத் தொடர்வதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா? இவை காணாமல் போனதற்கு யார் காரணம்? இதில் கவனக்குறைவாக இருந்தவர்கள் யார் என்பதையெல்லாம் அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவித்து, இனி இப்படி விடைத்தாள்கள் எல்லாம் காணாமல் போகாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கையை அரசு எடுக்கப் போகிறது என்பதையும் இந்த அவைக்கு விளக்குமாறு கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

***டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே முசிறியில் இருக்கின்ற ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலே எழுதப்பட்ட பிளஸ் 2 தேர்வின் விடைத்தாள்களிலே, இயற்பியல் மற்றும் பொருளியல் விடைத்தாள்கள் அன்றையதினம் கோயம்புத்தூருக்கு மறு எண்கள்

2010 ஏப்ரல் 8] [டாக்டர் க. நெடுஞ்செழியன்]

கொடுப்பதற்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. அதிலே பொருளியல் குறித்த விடைத்தாள்கள் மட்டும் அங்கே சென்று சேர்ந்திருக்கின்றன. இயற்பியல் விடைத்தாள்கள் அங்கு சேரவில்லை. பத்திரிகைச் செய்தியிலே, தபால் துறைக்கு நாங்கள் புகார் தெரிவித்திருக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தபால் துறையைத் தாண்டி, ஸ்காட்லாண்டு போலீசுக்கு இணையாகப் பேசப்படுகின்ற காவல் துறைக்கு புகார் தெரிவிக்கப்பட்டிருக்கின்றதா? அந்தப் புகாரின் அடிப்படையிலே அந்தச் விடைத்தாள்களைப் பெற அரசு ஆவன செய்திருக்கிறதா? அப்படிச் செய்திருக்கின்ற நிலையிலே எவ்வளவு கால அவகாசம் அதற்கு எடுத்துக்கொள்ளலாம்? ஆனால் அந்த நேரத்திலே அந்த மாணவர்கள்படுகின்ற மன உளைச்சலையும், அந்த மாணவர்களுடைய பெற்றோர்கள் படுகின்ற மன உளைச்சலையும் கருத்தில்கொண்டு, அந்த விடைத்தாள்கள் காணப்பெறவில்லை என்றால், நடத்தப்படுகின்ற தேர்வில் வினாத்தாள் மிக எளிதாக அமைய வேண்டுமென்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லி அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

முற்பகல் 11—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

***திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், முசிறியில் பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவர்களின் விடைத்தாள்கள் தபாலிலே அனுப்பப்பட்டபோது காணாமல் போயிருக்கின்றன. அதனால் அந்தப் பரிட்சை எழுதிய மாணவர்களும், மாணவர்களுடைய பெற்றோர்களும் மிகவும் வேதனைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். தபால் துறை என்று சொன்னாலே அது இன்றைக்கு இருக்கின்றதா என்பதைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால், செல்ஃபோன் மற்றபடி செய்திகளை துரிதமாகச் சொல்லக்கூடிய வகையில் தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஆகவே, தபால் துறையில் போடுகின்ற ஒரு தபால், நாம் குறிப்பிட்டு எழுதி அனுப்புகின்ற இடத்திற்குப் போய்ச் சேருகிறதா என்பதுகூடத் தெரியவில்லை. அப்படிப்பட்ட நிலையில் தபால் துறை

[திரு. எஸ். இராசசேகரன்] [2010 ஏப்ரல் 8

இருக்கின்றது. ஆகவே, இதை தபாலில் அனுப்புவதற்குப் பதிலாக, இனிமேலாவது நேரடியாகவோ அல்லது வேறு முறையிலோ இதை அனுப்ப வேண்டும். ஆகவே, இந்த பிளஸ் 2 மாணவர்களுக்கு எதிர்காலத்தில் நம்பிக்கை அளிக்கக்கூடிய முறையில் இந்த ஆண்டே அவர்கள் மேல் படிப்புக்குப் போகின்ற வகையில் ஒரு நடவடிக்கையை கல்வித் துறை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ம.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறியிலிருந்து அனுப்பப்பட்ட பிளஸ் 2 விடைத்தாள்கள் சென்றடைய வேண்டிய இடத்திற்குச் சென்றடையவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதனால் பாதிக்கப்படுகின்ற மாணவர்களுக்கு அந்த subject–இல் உயர்ந்தபட்ச மார்க்குகள் அளித்தும், இச்செயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர்ந்தபட்ச மதிப்பெண்கள் அளித்தும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, அவையின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மார்ச் மாதம் 8 ஆம் தேதியன்று முசிறி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 தேர்வுகள் அந்தத் தேர்வு மையங்களிலே, அரசு மேல்நிலைப் பள்ளி அய்யம்பாளையம், அரசு மேல்நிலைப் பள்ளி, தண்டரைபுதூர், அதேபோல அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, முசிறி ஆகிய 3 பள்ளிகளுக்குமாகச் சேர்த்து ஏறத்தாழ 479 பேர் அங்கே இயற்பியல் மற்றும் பொருளியல் பாடத் தேர்வுகளை எழுதியிருக்கிறார்கள். இந்த இயற்பியல் மற்றும் பொருளியல் பாடத் தேர்வுகள் முடிவுற்றவுடன், இந்த இரண்டு பாடத்திற்கான 3 விடைத்தாள் கட்டுகள், இயற்பியல் கட்டுகள் இரண்டு, ஒரு பொருளியல் கட்டு ஆகியவை முசிறி அஞ்சல் அலுவலகத்தில் அரக்கு முத்திரையிடப்பட்ட கட்டுகளாக booking செய்யப்பட்டிருக்கின்றன. இந்த 3 கட்டுகளில், பொருளியல்

2010 ஏப்ரல் 8] [திரு. தங்கம் தென்னரசு]

பாடத்திற்கான விடைத்தாள் கட்டு ஐ.பி. நம்பர் 633 சென்னை முகாமிற்கு வந்து சேர்ந்துவிட்டது. அதேபோல், இயற்பியல் பாடத்திற்காக இருக்கக்கூடிய, கோயம்புத்தூர் பெர்க் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முகாமுக்கு அனுப்பப்பட வேண்டிய இரண்டு விடைத்தாள் கட்டுகளில், ஐ.பி. நம்பர் 632 மட்டும் இயற்பியலுக்கு பெறப்பட்டிருக்கிறது. ஆனால், ஐ.பி. நம்பர் 633-க்கான இயற்பியல் பாட விடைத்தாள் அந்த முகாமிலே பெறப்படவில்லை. இந்த விடைத்தாள் கட்டில் ஏறத்தாழ 262 மாணவர்களுக்கான இயற்பியல் விடைத்தாள்கள் அங்கே இருந்திருக்கின்றன. அது அந்த முகாமில் பெறப்படவில்லை. இதுபற்றிய விவரம் சென்னை, அரசு தேர்வுத் துறை இயக்குநர் அவர்களுக்கு, முகாம் அலுவலர்களாலே பெறப்பட்டு, தேர்வுத் துறை இயக்குநரால் சென்னை தலைமை அலுவலக தபால் துறை அலுவலரிடத்திலே புகார் செய்யப்பட்டது. தேர்வு மையத் துறையின் அலுவலரும், முசிறி அஞ்சலக அலுவலரிடத்திலே இதுசார்பாக புகார் செய்திருக்கிறார். இந்தப் புகார்களின் அடிப்படையில்—இது கல்வித் துறையிலேயிருந்து முறையான வகையிலே அரக்கு முத்திரையிடப்பட்ட கவர்களிலே தபால் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு, அதற்கான ஒப்புகைச்சீட்டுகளெல்லாம் பெறப்பட்டிருக்கின்றன. ஆனால், தபால் துறையிலிருந்து அனுப்பப்பட்டபோது அது வந்து சேரவில்லை. எனவே, துறையின் சார்பாக தபால் துறையினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றபோது, அவர்களும் இதுகுறித்து வழக்கினைப் பதிவு செய்திருக்கிறார்கள். அதாவது Complainant, Thiru P.S. Raghunath, Assistant Superintendent of Posts, Trichy Head Office-லிருந்து Trichy Cantonment Crime Police Station-ல் வழக்கு எண் 945/2010, 5-4-2010 அன்று அந்த வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வழக்கின் அடிப்படையில், தொடர்ச்சியாக அந்த விடைத்தாள்கள் எங்கே இருக்கின்றன என்பதைத் தேடிக் கண்டுபிடிக்கக்கூடிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த விடைத்தாள்கள் இன்னும் ஓரிரு நாட்களிலே கிடைக்கப்பெற்றுவிடும் என்று சொன்னால், அந்த விடைத்தாள்களைத் திருத்தக்கூடிய பணியை தேர்வுத் துறை செய்யும். அப்படி இல்லாதபட்சத்தில் இந்த 262 இயற்பியல் தேர்வு எழுதிய மாணவர்களுக்குத் தனியாக ஒரு தேர்வு நடத்தி அந்த முடிவும் பிளஸ் 2 தேர்வு முடிவுகளோடு இணைத்து வெளியிடப்பப்படும் என்பதை நான் இந்த அவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

[திரு. தங்கம் தென்னரசு] [2010 ஏப்ரல் 8

முற்பகல் 11–10

ஏற்கெனவே 1987–88 ஆம் ஆண்டுகளிலே இதைப்போன்ற ஒரு நிகழ்விலே காரைக்குடி இரயில் நிலையத்தில், ஒரு தொடர்வண்டிச் சக்கரத்திலே சிக்கி விடைத்தாள்கள் சேதம் அடைந்த நிலையில் மறுதேர்வு எழுதுவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு நடைபெற்ற மற்றொரு சம்பவத்திலே வத்தலக்குண்டு தேர்வு மையத்திலேயிருந்து அனுப்பப்பட்ட விடைத்தாள்கள் மதிப்பீட்டு மையத்திற்கு வராமல், காணாமல் போன சம்பவம் ஒன்றும் ஏற்கெனவே இருக்கிறது. அந்த இரண்டு நிகழ்வுகளிலும் தனியாக அந்த மாணவர்களுக்குத் தேர்வுகளை நடத்தி, அந்த விடைத்தாள்களைத் திருத்தக்கூடிய பணியைச் செய்திருக்கிறார்கள். எனவே, அந்த முன்நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு இன்னும் ஓரிரு நாட்களில் அந்த விடைத்தாள்கள், மாணவர்கள் ஏற்கெனவே எழுதியிருக்கிற விடைத்தாள்கள் கிடைத்தால், அவற்றை மதிப்பீடு செய்யக்கூடிய பணியை இந்தத் தேர்வுத் துறை செய்யும். அவ்வாறு கிடைக்காவிட்டால் உடனடியாக மாணவர்கள் எந்தவகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, அவர்களுக்கு முன்கூட்டியே மறுதேர்வு நாளைத் தெரிவித்து, அவர்கள் தேர்வுக்குத் தயார் செய்வதற்கு ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் அவர்களுக்கு time கொடுத்து, புதிய வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு, அந்த மையங்களிலே தேர்வு நடத்தி, இந்த ஆண்டு அவர்கள் மேல் படிப்புக்குச் செல்வதற்கு எந்தவிதமான பாதகமும், மாணவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வகையில் அரசு நிச்சயமாக செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று-இதிலே பார்த்தீர்களேயானால், இந்த ஆண்டு பிளஸ் 2 எழுதியிருக்கிறவர்கள் 7,43,251 பேர். தேர்வு மையங்கள் வந்து பார்த்தீர்களேயானால் 1,109 மையங்கள். ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தோம் என்று சொன்னால், ஏறத்தாழ 55 அல்லது 60 இலட்சம் விடைத்தாள்கள் இதிலே கையாளப்பட்டிருக்கின்றன. இதிலே காணாமல் போனது 262 விடைத்தாள்கள்தான். 60 இலட்சம் விடைத்தாள்கள் சென்று இருக்கின்றன. 262 விடைத்தாள்கள் ஏதோ ஒரு மையத்திலே காணாமல் போய் இருக்கின்றன. எனவே, தேர்வுத் துறையிலே இதுவரை நடக்கக்கூடிய நடைமுறைகளிலே எந்தவிதமான பெரிய தவறுகள் இல்லை. எங்கோ ஒன்று நிகழ்ந்திருக்கக்கூடிய, அதுவும் குறிப்பாக தபால் துறையில் நடந்திருக்கக்கூடிய, மனிதத் தவறுகளின் காரணமாக

இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இது நான் தெரிவித்தவகையிலே சரி செய்யப்படும் என்பதை அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பவும் தேர்வு நடத்தப்படும் என்கிற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். எனக்கு அதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் 274 விடைத்தாள்கள் தான் காணாமல் போயிருக்கின்றன, 60 இலட்சத்தில் என்று வருகிறபோது. திரும்பவும் அந்த 274 பேர்களுக்கு மட்டும் தனித்த முறையிலே தேர்வு எழுதச் சொல்வது என்பது மாணவர்களுக்கு ஒரு சிரமத்தை ஏற்படுத்தும் என்று கருதுகிறேன். ஆகவே, ஏற்கெனவே மாணவர்கள் எழுதியிருக்கிறார்கள். விடைத்தாள்கள் திருத்தப்பட இருக்கின்றன. திருத்தப்படும்பொழுது எழுதிய விடைத்தாள்களுக்கு அதிகபட்சமாக என்ன மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றனவோ அந்த மதிப்பெண்களை அவர்களுக்கு வழங்கி, அவர்களுடைய பாதுகாப்பை உறுதி செய்வது என்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இல்லையென்றால் திரும்பவும் அவர்கள் இதன் காரணத்தினால் மாணவர்கள் பாதித்துவிட்டார்கள் என்ற நிலை வராமல் எப்படிப் பாதுகாக்க முடியும் என்ற அச்சம் இருக்கிறது. அதற்கு விளக்கம் அளிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: தலைவர் அவர்களே, காணாமல் போன விடைத்தாள்கள் 274 அல்ல, 262. ஒரு தகவலுக்காக, திருத்தத்திற்காகச் சொல்லுகிறேன். காணாமல் போய் இருக்கக்கூடிய விடைத்தாள்கள் இயற்பியல் பாடத்திற்காக உரியது. இது நாளைக்கு பொறியியல் கல்லூரிகளுக்கு, மருத்துவக் கல்லூரிகளுக்குச் செல்லுகின்றபோது இந்த விடைத்தாள்களில் இருக்கக்கூடிய மதிப்பெண்களைத்தான் அங்கே நாம் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போது நாம் அதிகபட்சமான மதிப்பெண்கள் கொடுத்தால், நாளைக்கே அதை எதிர்த்து யாராவது நீதிமன்றத்திற்குப் போக முடியும். எனவே, இந்த ஒரு கட்டத்திலே—இதுவே தமிழ் என்று எடுத்துக்கொண்டால்கூட,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அங்கே இரண்டு paper-கள் இருக்கின்றன. First paper- லே எவ்வளவு எழுதியிருக்கிறார்கள், second paper- லே எவ்வளவு எழுதியிருக்கிறார்கள். முன்னால் எவ்வளவு எழுதியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கலாம். ஆனால்—இயற்பியலிலே அது சாத்தியமாக இல்லை. எனவேதான், முன்நிகழ்வுகளிலே எந்தமாதிரியான அடிப்படை பின்பற்றப்பட்டிருக்கிறது என்பதைக் கருத்திலே கொண்டு. இதேபோன்ற சம்பவங்கள்—இது ஒன்றும் புதிதாக இன்று நடக்கவில்லை—ஏற்கெனவே நடந்திருக்கிற சம்பவங்கள் இருக்கின்றன. அப்போது எந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கிறதோ, அதே நடைமுறையைப் பின்பற்றுவதுதான் நாளைக்கு பல்வேறு விஷயங்களிலும் பொருத்தமாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி பாலபாரதி, அமைச்சர் அவர்கள் விளக்கமாக பதில் சொல்லிவிட்டார். இதற்கு மேலே இதில் விவாதம் எல்லாம் கிடையாது. உட்காருங்கள். No, no. (குறுக்கீடு)

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரோ செய்திருக்கக்கூடிய தவறுக்கு மாணவர்களே தண்டனை வாங்கிக்கொண்டிருப்பது நியாயமே இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய பதிலில் நியாயம் இருக்கிறது. எதிர்காலத்தில் சமூக நலன் சார்ந்த நியாயம் இருக்கிறது. ஆனால், அதற்காக யாரோ செய்த தவறினால் பேப்பர் காணவில்லை என்பதற்காக அவர்கள்மீது தண்டனையை சுமத்துவதும் நியாயம் இல்லை. ஆகவே, ஒரு குறிப்பிட்ட மதிப்பெண்களையாவது அவர்களுக்குக் கூடுதலாக 262 மாணவர்களுக்கும் வழங்குவதற்கு மறுபரிசீலனை செய்வதற்கு முன்வருவார்களா? சம்பந்தப்பட்ட நிர்வாகம் சார்ந்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே மாணவர்களுக்குத் தண்டனை

2010 ஏப்ரல் 8] [திரு. தங்கம் தென்னரசு]

கொடுப்பது என்பதே கிடையாது. நிகழ்ந்திருக்கக்கூடிய நிகழ்வு என்பது, முற்றிலும் எதிர்பாராத நிகழ்வு. மாணவர்கள் இப்போதுதான் அந்தத் தேர்வுகளுக்குத் தயார் செய்திருக்கிறார்கள். மீண்டும் அவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்கிறபொழுது, நாளைக்குக் காலையிலேயே எழுதுங்கள் என்று சொல்லவில்லை. ஒரு குறிப்பிட்ட காலம் கொடுத்துவிட்டுச் செய்ய இருக்கிறோம். ஏற்கெனவே அந்த மாணவர்கள் தயார் செய்திருக்கிறார்கள். நான் நியாயப்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. இருக்கக்கூடிய சூழ்நிலை இந்த நிலையிலே இருக்கிறது. எனவே, இதுதான் பொருத்தமாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

6. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009–2010 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் எழுபத்து மூன்றாவது முதல் எழுபத்தாறாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) பேரவைக்குள் உறுப்பினர்கள் தண்ணீர் பருகுவதற்கு அனுமதித்தல் மற்றும் உறுப்பினர்களின் வாகனங்களை வளாகத்தின் அனைத்து வழிகளிலும் அனுமதித்தல்

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு வார்த்தை. இங்கே மாண்புமிகு அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், உடல்நிலை பாதிக்கப்பட்ட அமைச்சர்களும், உறுப்பினர்களும் இருக்கின்றோம். ஆகவே, நீங்கள் தயவுசெய்து இங்கே தண்ணீர் அருந்துவதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.